மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.107/2019

வாக்குமூலம்.. வா.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வாநந்தம் | ஜாதி | |
| த/பெ. | பிலிப் | மதம் | |
| கிராமம் | | | |
| தாலுகா | | வயது | 46/2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 21-03-2023 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எம்.எஸ்.சி, பி.எட் வரை படித்துள்ளேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். வாதி ஆரோக்கியசாமி, எனக்கு மாமா முறையா என்றால் ஊரில் இருப்பதால் மைத்துனர் என்று கூப்பிடுவார்கள்., வாதி எனக்கு உறவினரா என்றால் ஆமாம்.

2. எங்கள் ஊரில் 250 தலைக்கட்டு இருக்கும். எங்கள் ஊரில் பல்வேறு சமூகத்தினரை சார்ந்தவர்களும் வாழ்கிறார்கள் என்றால் சரிதான். எனது மாமாவான வாதியுடன் நான் அடிக்கடி நீதிமன்றத்திற்கு வருவேன் என்றால் என் வழக்கு சம்பந்தமாக வருவேன். எனக்கு மொத்தம் எத்தனை வழக்குகள் இருக்கிறது என்றால் ஒரு உரிமையியல் வழக்கு இருக்கிறது. அதனால் எனக்கு வழக்கு நடைமுறைகள் தெரியும் என்றால் சரிதான்.

3. வாதியான எனது மாமா அழைத்ததால்தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வழக்கு புல எண்ணின் விஸ்தீர்ண விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் அறந்தாங்கி கட்டுமாவடி சாலைக்கு எந்த புறம் இருக்கிறது என்றால் வடபுறமாக இருக்கிறது.

4. அறந்தாங்கி கட்டுமாவடி சாலைக்கு வடபுறம் தான் திருவங்கூர், இராயன்வயல் செல்லும் சாலை இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி திருவங்கூர், இராயன்வயல் செல்லும் சாலையை பயன்படுத்தி தான் அந்த கிராம மக்கள் சென்றுவருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து இருக்கிற ஏகணிவயல் கிராமத்தில் ஒரு தேவலாயம் இருக்கிறது என்றால் சரிதான். அந்த தேவலாயத்தின் பெயர் ஆரோக்கியமாதா சர்ச் ஆகும்.

5. மேற்படி ஆரோக்கியமாதா சர்ச்சுக்கு தேர்பவனி உண்டு என்றால் சரிதான். மேற்படி தேர்பவனி ஏகணிவயல் சாலைகளை சுற்றிவரும் என்றால் சாலையிலும் வரும். சாலையில்லாத இடத்திலும் கட்டுமாவடி சாலை வரை வரும். சாலை இல்லாத இடம் என்று நான் சொல்வது வாதியின் இடத்திலும் சிறிது வரும் என்றால் சரிதான்.

6. சாலை இல்லாத இடத்தில் தேர்பவனி வரும்போது அந்த இடத்தின் சொந்தகாரர்கள்

தடுத்துநிறுத்துவது கிடையாது என்றால் சரிதான். ஏனென்றால் வாதியின் இடத்திற்கு மேல்புறமாக திருவங்கூர் பிரதான சாலை இருக்கிறது. சாலை இல்லாத இடம் என்று நான் சொல்வது பல நபர்களின் பட்டா இடம் உண்டு என்றால் மாதா கோவில் இடத்தில்தான் போகிறது பட்டா இடத்தில் இல்லை. நான் வழக்கிற்காக வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் மேற்சொன்ன மாதா கோவிலின் தேர்பவனி வாதி இடம் என்று சொல்லக்கூடிய சாலையிலும் வரும் என்றால் சரியல்ல.

7. வாதி இடத்தின் புல எண்.199 ஆகும். உட்பிரிவு ஞாபகமில்லை. மொத்தம் 5 உட்பிரிவுகள். மேற்சொன்ன 5 உட்பிரிவுகளின் தனித்தனி விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் பட்டா அளவை விட புல எண்.199/4-ஏயில் கூடுதல் விஸ்தீர்ணம் இருக்கிற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

8. மேற்சொன்ன கூடுதல் விஸ்தீர்ணத்தில்தான் தாவா சாலை செல்கிறது என்றால் இல்லை. வாதி எதற்காக இந்த வழக்கு போட்டார் என்றால் வாதியின் இடத்தை அத்து மீறி அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டதால் போட்டுள்ளார். யார், அபகரிக்க முயற்சி செய்தார்கள் என்றால் பஞ்சாயத்து போர்டில் அபகரிக்க முயற்சி செய்தார்கள் . எனக்கு பஞ்சாயத்து போர்டில் அபகரிக்க முயற்சி செய்தது நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

9. வழக்குவிவரம் எனக்கு யார் சொன்னது என்றால் நேரடியாக தெரியும். என்னுடைய நிரூபணவாக்குமூல விவரத்தை யார் சொன்னது என்றால் வழக்கறிஞர் தான் சொன்னார். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் பஞ்சாயத்து போர்டில் அபகரிக்க முயற்சி செய்ததை பற்றி ஏன் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை.

10. நான் வாதியிடம் யார், யார் பெயரில் வழக்கு போட்டுள்ளார்கள் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் 1. மாவட்ட ஆட்சியர் மட்டும் தான் தெரியும். நான் சொல்வது போல் ஊராட்சி மன்றம் மூலம் சாலை போட முயற்சி செய்ததாக வாதி என்னிடம் சொன்னரா என்றால் இல்லை நான் நேரடியாக தெரிந்து கொண்டேன். நான் வாதிக்காக, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்குவிவரம் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

11. வாதியின் பட்டா இடம் இருப்பதாக சொல்லப்படும் இடத்தில் ஊராட்சி மன்றத்தால் 2007 - 2008 ம் ஆண்டில் கிராவல் சாலை அமைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி சாலையை தான் 50 ஆண்டுகளாக ஏகணிவயல் கிராம மக்களும் திருவங்கூர் கிராம மக்களும் சாலையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

12. மேற்படி சாலையை பயன்படுத்தக்கூடாது என்று வாதி தன்னிச்சையாக முள்வெட்டி அடைத்தார் என்றால் சரியல்ல. பொதுமக்கள் பயன்படுத்தி வந்த சாலையை வாதி அடைத்தது தான் 2 முதல் 3 பிரதிவாதிகள் அகற்றினார்கள் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலருக்கோ, வட்டாட்சியருக்கோ புதிதாக சாலை அமைக்கும் அதிகாரம் கிடையாது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

13. கிராமப்புற அளவில், ஊராட்சி ஒன்றியம் மூலம் சாலைகள் அமைக்கப்படுவது எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி எத்தனை வழக்கு நடத்திவருகிறார் என்றால் தாவா வழக்குடன் சேர்த்து

ஒரு உரிமையியல் வழக்கு இருக்கிறது. வாதி எனது மாமா என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. உண்மைக்கு மாறான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால், தாவா சொத்தை பயன்படுத்திவருகிற கிராம பொதுமக்களை சேர்க்காத காரணத்தினாலும், ஊராட்சி மன்றத்தை தரப்பினராக சேர்க்காத காரணத்தினாலும் வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**